**ஜனாதிபதித் தேர்தல் 2019 – ஊடக அறிக்கை – ஒக்டோபர் 25, 2019**

கொழும்பு, இலங்கை

இலங்கை ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டதிலிருந்து, 36 நாட்கள் கடந்துள்ள நிலையில், தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் (CMEV) தேர்தல் சட்டம் தொடர்பான மீறல்களின் 464 வேறுபட்ட சம்பவங்களைப் பதிவு செய்துள்ளது. அதிகபட்ச எண்ணிக்கையிலான சம்பவங்கள் மேல் மற்றும் தென் மாகாணங்களிலிருந்து அறிவிக்கப்பட்டுள்ளன. அந்த முறைப்பாடுகளுள் 198 சம்பவங்கள் புதிய ஜனநாயக முன்னணிக்கு (NDF) எதிரானவையாகவும் 186 சம்பவங்கள் இலங்கை பொதுஜன பெரமுனவிற்கு (SLPP) எதிராகவும் அறிவிக்கப்பட்டன. இதுவரை, தாக்குதல் மற்றும் அச்சுறுத்தல் உட்பட சுமார் 16 வன்முறைச் சம்பவங்கள் பற்றி அறிவிக்கப்பட்டுள்ளதாக அவதானிக்கப்படுவது விசனத்திற்குரியதாகும்.

பின்வருபவை, தேர்தலுக்கு முந்திய காலம் தொடர்பாக கடந்த ஏழு நாட்களின் போது அவதானிக்கப்பட்ட சில போக்குகளாகும்:

**பல மாகாணங்களினதும் ஆளுநர்கள் பிரச்சாரங்களுக்காக அரச சொத்துகளை துஷ்பிரயோகிக்கின்ற அதேவேளை வேட்பாளர்களுக்கு ஆதரவாக ஜனாதிபதித் தேர்தல் பிரச்சாரங்களிலும் ஈடுபட்டுள்ளனர்.**

ஜனாதிபதியின் பிரதிநிதிகளாக சேவையாற்றும் போதும் மற்றும் மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழுவிற்கு தலைமை தாங்கும் அதேவேளையில், மாகாண ஆளுநர்கள் சிலர் ஜனாதிபதி வேட்பாளர்களின் பிரச்சாரங்களை முன்கொண்டு செல்வதிலும் ஈடுபட்டிருந்தனர். ஏ. ஜே.எம். முஸாமில், பேசல ஜயரத்தன மற்றும் ஹேமால் குணசேகர ஆகியோர் முறையே மேல், வடமேல் மற்றும் தென் மாகாணங்களின் ஆளுநர்களாக சேவையாற்றும் அதேவேளை, இலங்கை பொதுஜன பெரமுனவின் வேட்பாளரை முன்னிறுத்துவதற்கு தங்களின் சம்பந்தப்பட்ட மாகாண சபைகளுக்குச் சொந்தமான அரச சொத்துகளை துஷ்பிரயோகிக்கின்றனர்.

**அச்சுறுத்தல்கள் மற்றும் தாக்குதல்கள் தொடர்பான சம்பவங்கள்**

எதிர்தரப்பு கட்சிகளின் ஆதரவாளர்களுக்கு எதிராக பல அரசியல்வாதிகள் அச்சுறுதியதையும் மற்றும் வாய் வார்த்தைகள் மூலமான துஷ்பிரயோகங்கள் மேற்கொள்ளப்பட்ட எண்ணற்ற பல சம்பவங்கள் பற்றி குறிப்பாக கவனம் செலுத்தப்படுதல் வேண்டும். இவை விசேடமாக பிரதேச மட்டத்தில் நிகழ்ந்துள்ளன.

**தேர்தலுக்கு முந்திய காலத்தின் போதான சமூக ஊடகத்தின் பாவனை**

குரோதம் மற்றும் தவறான தகவல்கள் என்பவற்றைப் பரப்பும் பேச்சுகளைக் கட்டுப்படுத்துவதில் தேர்தல் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளுக்கு துரிதமாகப் பதிலிறுப்பதில் முக நூல் (Face book) அதிகாரிகளினால் முனைப்புக் காண்பிக்காமை என்றவொரு நிலைப் பாட்டைப் புறக்கணிப்பது கடினமாக இருந்தது. இது, முக நூல் போன்ற சமூக ஊடக வலையமைப்புகள் தேர்தல் தொடர்பாக தகவல்களைப் பரப்புரை செய்வதில் ஒரு காத்திரமான பாத்திரத்தை வகிக்கின்றன என்ற பின்னணியிலும் கூட நிகழ்கின்றது. முக நூல் போன்ற சமூக ஊடக வலையமைப்புகளின் பங்களிப்புகள் எதிர்மறையான திசை நோக்கிச் செல்வதை CMEV கூர்மையாக அவதானித்துள்ளது. இது, இலங்கையின் தேர்தல் செய்முறைகளின் முன்னேற்றத்தில் மிகவும் முக்கியமானதாக இருப்பதற்கான அவற்றின் திறனாற்றலின் பின்னணியிலும் கூட ஆனதாகவுள்ளது. சமூகத் தராதரங்கள் தொடர்பாக முக நூலில் தங்கியிருத்தல் பற்றி அதன் சொந்த நிறுவனத்தால் சொல்லப்பட்டவை குறித்து ஒரு பரந்த சமூகப் பரப்புரை

உருவாக்கப்படுதல் வேண்டுமென CMEV நம்புகிறது. இலங்கையில் மொழிரீதியான சிக்கல்களுடன் கையாள்வதற்கு தர நியமங்களைப் பிரயோகித்தலில் முக நூலின் முரண்பாட்டு நிலை மற்றும் தவறுதல் என்பன தேர்தலின் போது குரோதப் பேச்சு மற்றும் தவறான தகவல்கள் என்பவற்றின் பரவுதலை பெருமளவிற்கு மேலும் மோசமாக்குகிறது. ஓர் அண்மித்த காலங்களினுள் பல தேர்தல்கள் நடக்கப் பெறுவதற்கான ஒரு காலத்தை நோக்கி இலங்கை நகர்கின்றது என்பதனால், இது குறிப்பாக முக்கியத்துவம் கொண்டதாகவுள்ளது.

அதற்கமைய, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின் பின்னணியில் சமூக ஊடக நிறுவனங்களால் கடைப்பிடிக்கப்பட வேண்டிய வகிபாகம் தொடர்பான ஒரு விரிவான அறிக்கையை தயாரித்து தொகுக்கும் செய்முறையில் CMEV ஈடுபட்டுள்ளது. இந்த அறிக்கை ஜனாதிபதித் தேர்தலின் முடிவில் வெளியிடப்படும்.